# உயிரை மாய்த்துக்கொள்வது தீர்வல்ல

நா. நரேந்திரன்



நூல் வெளியீட்டு விழாவில் டாக்டர் பீட்டர் மாக்கும் (இடது) திரு எஸ்.ஆர். நாதனும்.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

உயிர் என்பது விலைமதிப்பற்றது. மனிதர்களாக உயிர் பெற்று வருவதே அரிது என்று சான்றோர்கள் கூறி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இருப்பினும், இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள் பல பரிமாணங்களில் வருவது இயல்பு.

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு காண்பது என்பதைப் பற்றி யோசிக்காமல் உயிரை மாய்த்துக்கொள்வதுதான் ஒரே வழி என்று அவசரப்பட்டு முடிவெடுத்து வாழ்க்கைப் பயணம் முழுமை அடைவதற்கு முன்பே அதை முடித்துக்கொள்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக தேசிய சமூகச் சேவை மன்றத்தின் ஒரு பகுதியான 'பிராம்' நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் புத்தகம் ஒன்று நேற்று வெளியிடப்பட்டது. டாக்டர் பீட்டர் மாக் எழுதியுள்ள 'த டே த பால் டிடன்ட் பவுன்ஸ்' எனும் புத்தகத்தின் வெளியீட்டு விழா சாமர் செட் ரோட்டில் அமைந்துள்ள சமூகச் சேவைக் கழகத்தில் நடைபெற்றது.

புத்தக வெளியீட்டு விழாவில் முன்னாள் அதிபர் திரு எஸ்.ஆர். நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். இவர் இந்தப் புத்தகத்தின் முன்னுரையை எழுதி இருந்தார்.

17 வயது இளைஞன் ஒருவன் தமது படுக்கறையில் தூக்கிலிட்டு உயிரை மாய்த்துக்கொண்ட உண்மைக் கதை தொடர்பாக புத்தகம் எழுதப்பட்டுள்ளது. மறைந்த தம்பிக்கு கடிதம் எழுதும் நோக்கில் தமது மனதை ஆட்கொண்ட சோகத்தைக் கொட்டி அதை தமது வலைப்பதிவில் குறிப்பிட்டிருந்தார் உயிரை மாய்த்துக் கொண்டவரின் அண்ணன்.

துயரமே வடிவான, மனதை உருக்கும் கடிதத்தைப் பார்க்கும் வாய்ப்பு பிராம் நிலையத்தின் நிர்வாக இயக்குநர் ஏஞ்சி சியூவுக்குக் கிட்டியது. அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் பொது மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராகப் பணிபுரியும் டாக்டர் மாக் கைத் தொடர்பு கொண்டு மாண்டவரின் அண்ணனை அணுகுமாறு ஏஞ்சி கேட்டுக்கொண்டார்.

திருவாட்டி சியூவின் வேண்டுகோளுக்கு இணங்க, டாக்டர் மாக் அந்த இளைஞனின் அண்ணனைச் சந்தித்துப் பேசினார். இளைஞன் உயிரை மாய்த்துக்கொண்டது, அதனால் அவரது குடும்பத்தின் நிம்மதி சிதறிய விதம், இன்றும் அவர்கள் அந்த எதிர்பாராத பிரிவை எண்ணி துடிப்பது குறித்தும் நூலில் கூறப்பட்டுள்ளது.

“பிரச்சினைகளைப் பற்றி தங்கள் அன்புக்குரியவர்களிடம் கலந்து பேசாமல், வாழ்க்கையில் எழும் சவால்களைச் சந்திக்காமல் உயிரை மாய்த்துக் கொள்வதால் பிரச்சினைகள் நீங்குவதில்லை. உயிரை மாய்த்துக் கொள்வதால் குடும்பத்தினருக்கு ஏற்படும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வேதனையை அனைருக்கும் எடுத்துக்காட்டவே இந்த நூல் வெளியிடப்படுகிறது,” என்று டாக்டர் மாக் தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் மொத்தம் 467 பேர் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டார்கள் என்று நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை 20 ஆண்டுகள் இல்லாத அளவில் அதிகம். கடந்த ஆறு ஆண்டுகள் இல்லாத அளவில் உயிரை மாய்த்துக்கொண்ட 10 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டவர்களின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், பிள்ளைகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதைத் தடுப்பதே தலையாய கடமை என்று டாக்டர் மாக் கூறினார்.

அதற்குத் தேவையான அணுகுமுறை குறித்து டாக்டர் மாக் விவரித்தார். கல்வி, உறவுகள், காதல், தோல்விகள், ஏமாற்றங்கள் என்று வாழ்க்கையில் பல கோணங்களிலிருந்து வரும் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் பிள்ளைகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் அவல நிலையைத் தவிர்க்க டாக்டர் மாக் சில முக்கிய கருத்துகளை நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரிடமும் பகிர்ந்துகொண்டார்.

மனம் துவண்டுவிடாமல் வாழ அவசியமான திறன்களில் ஒன்றான மீள்திறனை பிள்ளைகளுக்குக் கற்றுத் தருவது அதிமுக்கியம் என்று அவர் சொன்னார். மீள்திறன் எனும் பெட்டகம் இருந்தால் எவ்வித பிரச்சினையையும் உதறித் தள்ளி அவற்றிலிருந்து மீண்டு வரும் வலிமை பிள்ளைகளுக்கு இருக்கும் என்றார் டாக்டர் மாக்.

பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிட்டு, அவர்களை மகிழ்ச்சியான பிள்ளைகளாக வளர்த்துக் கொண்டு வரவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

“தோல்வி அடைவது தவறல்ல. அதனால் வெட்கித் தலை குனியத் தேவையில்லை என்பதைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். வாழ்வில் மகிழ்ச்சியுடன் இருப்பதே முக்கியம். மகிழ்ச்சியுடன் இருப்பவர்களே ஆரோக்கியமாக இருக்க முயற்சிகள் எடுப்பர். மகிழ்ச்சி, ஆரோக்கியம். இதுவே 'பிராம்' நிலையத்தின் தாரக மந்திரம்,” என்றார் திருவாட்டி சியூ. தங்களுக்கு உதவி தேவை என்று கருதுபவர்கள் எண் 71 இராவடி ரோட்டில் உள்ள ரென் சி மருத்துவமனையில் அமைந்திருக்கும் 'பிராம்' நிலையத்தை அணுகலாம் என்றும் திருவாட்டி சியூ தமிழ் முரசிடம் தெரிவித்தார்.